பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 30 குரோதன 30 இதழ் 248
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-10-1985

## 'கண்காணிப்புக்குழு எமக்கு சாதகமானதல்ல!'

### உமா மகேஸ்வரன் கருத்து

(கொழும்பு)

"பொது மக்களுக்கு எந்த வித இடையூறுகளும் செய்வதில்லை என்பதுதான் போராளிகளின் நோக்கமாகும். எமது போராட்டம் அரசுக்கு எதிரானதேயன்றி பொதுமக்களுக்கு எதிரானதல்ல."

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயல் அதிபர் திரு. உமாமகேஸ்வரன் செய்தி ஸ்தாபனமொன்றிற்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு

(5-ம் பக்கம் பார்க்க)

## செங்கலடியில் 4 பேர் கைது

(மட்டக்களப்பு)

செங்கலடியில் நேற்று நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

# 'நிபந்தனைகளைச் சமர்ப்பித்து நிலைமையை அவதானிப்பேன்'

## விசேட விமானத்தில் இன்று சிவத்தம்பி விரைகிறார்

(ஏ. வி. மாணிக்கம்)

யோர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இன்று கூடுகிறது முதல் கூட்டத்திலேயே நான் சில நிபந்தனைகளை குழு முன்னிலையில் சமர்ப்பிப்பேன். இலங்கை இனப்பிரச்னை குறித்து அரசாங்கத்துக்கும் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கமைய யோர்நிறுத்தம் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்டவை நடைபெறுகிறதா என்று அவதானிப்பதே எனது முக்கிய நோக்கமாக இருக்கும்."

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் கா. சிவத்தம்பியை நேற்றுமாலை சந்தித்தபொழுது மேற்குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்திச் சொன்னார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர் பொலிஸ் நிலையம் தாக்குதல் முயற்சி?

(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ்நிலையத்தை மீண்டும் தாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகப் பாதுகாப்புப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல்களைத்தொடர்ந்து பாதுகாப்பு இங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

விசேட பொலிஸ்பிரிவினரும் கொமாண்டோ பொலிசாரும் வரவழைக்கப்பட்டு உஷார் படுத்தப்பட்டதுடன் வேலிகள் சோர்ந்தும் கடந்த சனிக்கிழமை பலப்படுத்தப்பட்டிருந்தது.

## நேரடித் தலையீடு வேண்டுமாம்!

(கொழும்பு)

"இலங்கைஇனப்பிரச்னைக்கு நேரடி யுத்தம் மூலமே தீர்வு காணமுடியும். ஆதலால் அதற்கான உதவியை செய்யவேண்டும்."

விடுதலைப்புலிகள் இயக்க ஆதரவாளரும், பத்திரிகையாளருமான திரு. கோவை மகேசன் இந்திய அரசுக்கு மேற்கண்ட கோரிக்கையை விடுத்

(5-ம் பக்கம் பார்க்க)

## லலித் தலைமையில் கண்காணிப்புக் குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இன்று காலை பதினொரு மணிக்கு முதல் தடவையாகப் பாதுகாப்பு அமைச்சில் கூடுகிறது.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமையில் இம்மாநாடு நடைபெறும்.

இம்மாநாட்டில் போர்நிறுத்தம் தொடர்பான விஷயங்களும், கண்காணிப்புப் பற்றியும் தெரிவிக்கப்படும். (ப)

## மாற்றுத் தீர்மானம் தமிழ்குழுக்கள் கூடுகின்றன

(சென்னை)

இலங்கை அரசு சமர்ப்பித்த தீர்மானத்தை தமிழ் அமைப்புகள் ஏற்றுக்கொள்ளாததையடுத்து மாற்றுத் தீர்மானம் ஒன்றை சமர்ப்பிப்பது பற்றி ஆலோசனை செய்வதற்காக, தமிழ் அமைப்புகள் இன்று சென்னையில் கூடும்.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியினரும், ஈழம் தேசிய விடுதலை முன்னணியினரும், ஒன்றாக இணைந்து மாற்றுத் தீர்மானம் சமர்ப்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆலோசிப்பார்கள். (ப)

## மக்களைப் பாதிக்கும் கொலை, கொள்ளைகளை "கட்டுப்படுத்தும் பொறுப்பிலிருந்து இயக்கங்கள் விலகக்கூடாது"

### பல்கலைக்கழக மாணவர் அவை வலியுறுத்து

(எம். ரி. சந்திரகுமார்)

தமிழ்ப்பகுதிகளில் கடந்தஇரு வாரங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொலை, கொள்ளை சம்பவங்களைக் கண்டித்தும், கடந்த வெள்ளிக்கிழமை புத்தூரில் நடைபெற்ற கொள்ளையின்போது கொலைசெய்யப்பட்ட ஸ்ரீ ராமச்சந்திரனின் குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இக் கொலை, கொள்ளைச்சம்பவங்களால் எமது தமிழ்மக்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

சிவம் இன்டஸ்றீஸாரின்

## தீபாவளி வாழ்த்து மடல்கள்

| | | |
|---|---|---|
| No. 1. | கட்டிங் காட் 100க்கு | 550-00 |
| No. 2 | இருபக்க ஆட்போட் படம் | 300-00 |
| No. 2. | இருபக்க ஆட்பேப்பர் படம் | 225-00 |
| No. 3 | கட்டிங் காட் | 250-00 |
| No. 4. | இருபக்க ஆட்போட் படம் | 250-00 |
| No. 5 | கட்டிங் காட் | 200-00 |
| No. 6. | பெரிய இருமடிப்பு | 200-00 |
| No. 7. | இருமடிப்பு பூகாட் | 100-00 |
| No 8. | சிறிய இருமடிப்பு | 50-00 |
| | போஸ்ற் காட் | 25-00 |

## சிவம் இன்டஸ்றீஸ்

மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பழை.

(1249)

## மூதூரில் 3 முஸ்லிம் இளைஞர் படுகொலை!

(கொழும்பு)

மூதூரைச் சேர்ந்த மூன்று முஸ்லிம்கள், துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். இவர்களின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

முகமட் இஸ்மாயில், முகமட் நஸீர் (18 வயது), சேகுமுகமட் ராசாதம்பி (48 வயது) முகமட் சலீம் (28 வயது) ஆகியோரே பலியானவர்களாவர்.

கல்லிமைத்திலில் சம்பவதினம் பிற்பகல் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதாகவும், மக்கள் பீதியடைந்து வீடுகளுக்குள் பதுங்கிவிட்டதாகவும், மறுநாள் காலையில் பார்த்த போது மூன்று சடலங்கள் காணப்பட்டதாக இச் சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

மூதூரில் நேற்றுக்கடைகள் யாவும் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தது. (ப)

## 'இன்ரசிற்றி' வெள்ளிக்கிழமை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து புறப்பட்ட 'யாழ்தேவி' நேற்றுப்பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். ரயில்நிலையத்தை வந்தடைந்தது. ரயி

(5-ம் பக்கம் பார்க்க)

## சப்இன்ஸ்பெக்டர் தற்கொலை

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் நந்தபாலபத்திரான நேற்றுக் காலை, அவரது மேசைமீது துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தார்.

மரணவிசாரணையின் பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ப)

# அரி விளம்பரம்

## வகுப்புகள்

N: C: E: ஆங்கில வகுப்புகள் சனிக்கிழமை 2-11-85இல் ஆரம்பம். சனி, ஞாயிறு நடைபெறும். விபரங்களுக்கு யாழ்ப்பாணக் கல்வி நிலையம், மேல் மாடி, சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 1243

## சேவை

G. C, E (O/L) கணிதம் அனுபவமுடைய Graduate ஆல் படிப்பிக்கப்படுகின்றது: கட்டணம் இல்லை. சேவையாகவே கற்பிக்கப்படுகின்றது அரியாலை, புங்கன்குளத்தில் விபுலானந்தர் வீதியில், 55ஆம் இலக்க வீட்டில் விசாரிக்கவும். 1253

## கொமிஷனுக்கு

யாழ். வளாகத்திற்கு அருகாமையில், பிறிஜ் உட்பட தளபாடங்களுடன் குளிர்பானம், தேநீர் கடை கொமிஷனுக்கு கொடுக்கவுள்ளது: ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 246, C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 1246




## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோருக்கு ஓர் விண்ணப்பம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் 1982ம் ஆண்டு ஆடி மாதம் 30ந் திகதி பொது நம்பிக்கைச் சொத்தாக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியின் ஆணைப்படி மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தினுல் தெரிவு செய்யப்பட்ட ஏழு உறுப்பினரைக் கொண்ட தர்மகர்த்தா சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில், 'மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் அடியார்கள் சங்கம்'' என்ற பெயர் கொண்ட சங்கம் ஒன்றை ஒரு சிலர் கூட்டி ரூபா 5/– வீதம் சந்தாப் பணம் வசூலிக்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. இச் சங்கத்திற்கு மருதடி விநாயகர் ஆலய நிர்வாகத்தில் ஒருவித தொடர்பும் இல்லை என்றும், 6-8-1978 இல் ஸ்தாபித்த மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்திற்குத்தான் ஆலயத்தைப் பரிபாலிக்கவும், தர்மகர்த்தாக்களை தெரிவுசெய்யும் உரிமையும் மாவட்ட நீதிபதியினுல் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் வழிபடுவோர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம்.
(1247)

காணி ஆணையாளர் திணைக்களம், கிளிநொச்சி மாவட்டம்

## கேள்விப் பத்திரங்கள் கோரல்

## மழைநீர் பயிர்ச்செய்கைத்திட்டம்

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

2. கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சிக் கச்சேரியின் காணிப்பிரிவிலிருந்து 14-10-1985 தொடக்கம் 22-10-1985 வரையும் வழங்கப்படும்; கேள்விப் பத்திரங்கள் பெறப்படும்பொழுது மீள அளிக்கப்படாத தொகையாகிய ரூபா 50/-ஐயும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் வைப்புப் பணத்தையும் ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியாகப் பணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களைத் தலைவர், கேள்விச்சபை, அரசாங்க அதிபர் செயலகம், கிளிநொச்சி என்று முகவரியிடப்பட்டு 23-10-1985ஆம் திகதி மு. ப. 10-00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும், அல்லது அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடுதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தை தபாலில் அனுப்புவதாயின் மேலுறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிட்ட கட்டிடத்திற்கான, வீதிக்கான கேள்விகள் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்; சீல் வைக்கப்பட்டுள்ள கேள்விகள் அதே தினத்தில் 23-10-1985 முற்பகல் 10-30 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இத்தினத்தில் கேள்விகள் திறக்கப்படும்போது பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

4. ஏற்கெனவே இக் கேள்விப்பத்திரத்துக்கான பண வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீள பண வைப்புச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எனினும் விண்ணப்பங்களைப் புதுப்பித்தல் வேண்டும்.

### வேலைத் திட்டத்தின் விபரங்கள்

| | தொகை | பதிவுத்தொகை | வைப்புச்செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| கட்டிடங்கள்- | | | |
| 1. பாடசாலை அமைத்தல் (மலசலகூடங்கள் உட்பட) | 01 | 250,000/- | 300/- |
| 2. அரசினர் விடுதி அமைத்தல் தரம் - III | 01 | 150,000/- | 200/- |
| 3. அரசினர் விடுதி அமைத்தல் தரம் II | 02 | 200,000/- | 200/- |
| வீதிகள்:- | | | |
| 1. ஜெயபுரம் பல்லவராயன்கட்டு புதிய வீதி அமைத்தல் | | 100,000/- | 150/- |
| 2. வன்னேரிக்குளம் ஜெயபுரம் உள்ள வீதியைத் திருத்தல் | | 100,000/- | 150/- |
| 3. ஆனைவிழுந்தான் வீதிக்குப் பாலங்கள் அமைத்தல் | | 100,000/- | 150/- |

மேலதிக விபரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

த. ஜெயநாதன்,
தலைவர், கேள்விச்சபை,
மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

காணிக்கிளை.
கச்சேரி, கிளிநொச்சி.
1985-10-11.

1248

## விற்பனைக்கு

மிருசுவில் படித்த மகளிர் வீதியில் 13 பரப்புத் தென்னங் காணியும், அச்சுவேலி வசாவிளான் வீதியில் 8 பரப்புத் தோட்டக் காணியும் விற்பனைக்குண்டு: விபரங்கட்கு: A. N. துரைராஜா, 12/4, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1242

கோப்பாய் தெற்கு, விநாயகர் ஒழுங்கை, கந்தவேள் வித்தியாசாலைக்கு அருகாமையில் 7 பரப்புக் காணி வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்றவகையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- மகாவளவு. கோப்பாய் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞாயிறு தவிர்ந்த நாட்களில் காலை 8-30—1-00 மணிவரை சந்திக்கலாம். 1252

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அரசடி வீதியில் இரண்டு பரப்பு காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. கந்தசாமி, ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம், அரசடி வீதி. 1256

1500W மின் வலுவுடைய றெமின் ஜெனரேற்றர் மிகவும் நல்லநிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருச்செல்வம் அன் கொம்பனி, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் 1223

## தவறிவிட்டது

முக்கிய தஸ்தாவேஜுகள் அடங்கிய கறுப்புநிற ஹான்பேக் தாவடிச் சந்திக்கும் நாச்சிமார் கோவிலுக்கும் இடையில் தவறி விழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். அ. கோபேசுவரி, இராசா மில் வீதி, தாவடி, கொக்குவில். 1259

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4291 வெற்றுச் சாக்குகள் வரையில் விற்பனைக்கு இருக்கிறது: கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணம் ரூபா 800/-ம் கேள்விப்பத்திரப்பணம் ரூபா 10/-ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 19-10-85 சனிக்கிழமை காலை 10மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். அல்லது சங்கத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

பொதுமுகாமையாளர்
(1239)

ஓம்

## திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் விமலேஸ்வரன் (சட்டத்தரணி)

மணமகள்: செல்வி இந்திராணி, பி. ஏ.

இடம்: மணமகள் இல்லம், கரவெட்டி.

காலம்: 19-10-1985 சனிக்கிழமை

நேரம்: பகல் 10-00 மணி முதல் 12-30 மணிவரை

உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ந. விசுவநாதபிள்ளை தம்பதிகள்
"புஸ்பகம்,"
16, சட்டநாதர் வீதி,
நல்லூர்.


மு. வேலுப்பிள்ளை தம்பதிகள்
"பூம்புகார்,"
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

[1224]

## 31ம் நாள் நினைவஞ்சலி

### இராசா இராசையா

(இளைப்பாறிய இ. போ. ச. பஸ் சாரதி பருத்தித்துறை டிப்போ)



தோற்றம்: 17-08-1930 மறைவு: 16-09-1985

எங்கள் நெஞ்சமெல்லாம் அணையாச் சுடர் ஒளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் சிகரமாய் எல்லோர் நன்மதிப்பையும் பெற்று மின்னலென மறைந்து எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.
"மணி வாசா", புலோலி தெற்கு. (1220)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## பிரி. அமைச்சர் ஜெவ்ரி ஹௌவ்வின்———

# பி.எல்.ஓ. பிரதிநிதிகளுடனான சந்திப்பு

# பிரிட்டிஷ் அரசினால் ரத்து!

## இஸ்ரேலை அங்கீகரிக்காதது காரணமாம்!

லண்டன், அக். 15

பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரமுகர்களுக்கும், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. ஜெவ்ரி ஹௌவ்விற்குமிடையே நிகழவிருந்த சந்திப்பொன்றை பிரிட்டிஷ் அரசு ரத்துச் செய்துள்ளது. வன்முறைகளைக் கைவிடுவது, இஸ்ரேலை அங்கீகரிப்பது என்ற இரு நிபந்தனைகளை பி. எல். ஓ. ஏற்க மறுத்ததாலேயே இந்த ரத்து மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பி. எல். ஓ. வின் இரு முக்கிய பிரதிநிதிகள் பிரிட்டன் அரசு சார்பில் வெளிவிவகார அமைச்சர் திரு. ஜெவ்ரி ஹௌவ்வை நேற்றுமுன்தினம் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. பி. எல். ஓ. வுடனான பிரிட்டனின் முதலாவது உத்தியோக பூர்வசந்திப்பு இதுவென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இறுதிநேரத்தில் பிரிட்டிஷ் அரசு இச் சந்திப்பை ரத்துச்செய்தது.

இந்த நடவடிக்கை பி. எல். ஓ. வட்டாரங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், அவமதிப்பையும் ஏற்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாலஸ்தீனப் பிரச்சினைக்கு ராஜதந்திர வழிகளிலேயே தீர்வுகாணமுயல வேண்டும். வன்முறைகளைக் கைவிட்டு மத்தியகிழக்கில் இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிக்கவேண்டும் என்ற நிபந்தனைகளை பிரிட்டிஷ் அரசு பி. எல். ஓ. விடம் விடுத்திருந்தது. ஆனால் அவ்வியக்கம் இவற்றை ஏற்கமறுத்திருந்தது. இதனைத் தொடர்ந்தே பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான சந்திப்பை பிரிட்டிஷ் அரசு ரத்துச் செய்தது.

திரிபாலியிலுள்ள பி. எல். ஓ. வின் முக்கிய பிரமுகர் ஒருவர் இந்த ரத்து குறித்து கருத்து வெளியிட்டிருப்பதாவது: "பி. எல். ஓ. வன்முறைகளில் நாட்டம்கொள்ளவில்லை. ஆனால் அது இஸ்ரேலை அங்கீகரிக்கவேண்டும் என்ற வேண்டுகோள் எவ்வகையிலும் நியாயமற்றது; ஏற்றுக் கொள்ளமுடியாதது" என்றார். (இ)

உலகச் செய்திகள்

# சோவியத் மாநிலத்தில் பூகம்பம்!

மாஸ்கோ, அக். 15

சோவியத் யூனியனின் மத்திய ஆசிய மாநிலக் குடியரசான தட்ஜிகிஸ்தானில் பெரும் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

இப்பூகம்பம் நேற்று முன்தினம் ஏற்பட்டது. இதுபற்றிய விபரங்களை சோவியத் யூனியன் முழுமையாக வெளியிடவில்லை. ஆயினும் அங்கு பலத்த உயிர், உடமைச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக சோவியத்அரசு வட்டாரங்களை ஆதாரங்காட்டித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று சோவியத் யூனியன் தொலைக்காட்சியில் தட்ஜிகிஸ்தான் மாநில பூகம்ப அழிவுகள் காண்பிக்கப்பட்டன. அதில் பாதைகள் ஆழமாக வெடித்துக் கிடந்ததையும், கட்டிடங்கள் சரிந்து இடிபாடுகளுக்குள்ளாகியிருந்ததும் காண்பிக்கப்பட்டது.

இத்தகவல்களின் அடிப்படையில் உயிர்ச்சேதம் பலமாக இருக்கவேண்டுமென்றே ஊகிக்கப்படுகிறது. இதனை ஊர்ஜிதம் செய்வதுபோல சோவியத் கிரெம்ளின் ஆட்சியாளர்கள் தட்ஜிகிஸ்தான் மாநிலத்துக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பணிகளை மேற்கொள்ள விசேட குழுவொன்றும் சோவியத் அரசினால் நியமிக்கப்பட்டுள்ளது.

## பி. எல். ஓ. அபுல் அபாஸ் வெளியேற்றம்

# இத்தாலியபாதுகாப்பமைச்சர் கடும் ஆட்சேபனை!

ரோம், அக். 15

இத்தாலிய அரசாங்கம் பி. எல். ஓ. பிரமுகர் அபுல் அபாஸை அமெரிக்காவிடம் ஒப்படைக்காதது குறித்து இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர் ஸ்படோலினி கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேபனையை வெளிக்காட்டுமுகமாகவே அவர் நேற்று இத்தாலிய அமைச்சரவைக் கூட்டமொன்றையும் பகிஷ்கரித்தார்.

அமெரிக்காவின் கோரிக்கைக்கிணங்க அபுல்அபாஸை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டுமென்பது அவரது கருத்தாகும். இந்த அமைச்சர் இத்தாலிய கூட்டரசாங்கத்திலுள்ள ஒரு தீவிர அமெரிக்கசார்பு அரசியல்வாதி என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாலிய அரசாங்கம் இவரின் ஆட்சேபனைக்குப் பதிலளித்துள்ளது. இத்தாலிய நீதிச்சட்டங்களின்படி அமெரிக்காவின் கோரிக்கை செல்லுபடியாகாதென்றும், அபுல் அபாஸ் ஒரு ஈராக்கிய கடவுச்சீட்டு வைத்திருந்தார் எனவும் தெரிவித்துள்ளது. எனவே அபாஸை குற்றவாளி என நிரூபித்து நாடுகடத்த முடியாதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலிய பாதுகாப்பமைச்சரின் கருத்து இத்தாலிய கூட்டரசாங்கத்தில் நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டது. திரு. ஸ்படோலினியைப் போன்று மேலும் பல இத்தாலிய அமைச்சர்கள் அமெரிக்க சார்பு கொள்கையை கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க விமானங்கள் கடத்திவந்து இத்தாலியில் தரை இறக்கிய எகிப்திய விமானத்தில் அபுல்அபாஸ் இருந்தார். அவருடனேயே இத்தாலிய பயணிகள் கப்பல் கடத்தல்காரர்களும் இருந்தனர். அக் கடத்தல்காரர்கள் இத்தாலிய அரசினால் கைது செய்யப்பட்டனர். அபுல் அபாஸ் மட்டும் இத்தாலியில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டார். இத்தாலிய கப்பல் கடத்தலினதும் அமெரிக்க பயணி ஒருவர் அதில் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும் அபுல்அபாஸே சூத்திரதாரி என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (இ)

### இந்து இளைஞன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இந்துஇளைஞர் பேரவையின் வெளியீடான "இந்துஇளைஞன்" இரண்டாவது இதழ் வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலய புரட்டாதி உற்சவ இதழாக வெளியிடப்பட்டுள்ளது.

தேவஸ்தான ஆலய நிர்வாகத் தலைவர் திரு. து சீனிவாசகம் இதன் முதலாவது பிரதியையும் ஆலய நிர்வாகக் குழுவின் செயலாளர் திரு. எஸ். பழனிச்சாமி இரண்டாவது பிரதியையும் பெற்று விற்பனையைத் ஆரம்பித்து வைத்தனர்.

பேரவைத்தலைவர் திரு. இ. இ. சண்முகலிங்கம் தலைமை

## மிருசுவிலிலும் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியிலும், இனந்தெரியாதவர்களினால் வீடொன்றில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

### கிளர்ச்சியாளர் பயமுறுத்தல்

## எல்சல்வடோர் ஜனாதிபதியின் புதல்விகள் யு. எஸ். சென்றனர்

சன்சல்வடோர், அக். 15

எல்சல்வடோர் ஜனாதிபதி திரு. டுவாட்டே கிளர்ச்சியாளர்களுக்கு அஞ்சி தமது புதல்விகளையும், பேரக் குழந்தைகளையும் அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்துள்ளார்,

ஐந்து வாரங்களுக்குமுன்னர் டுவாட்டேயின் மூத்த புதல்வி கிளர்ச்சியாளர்களால் கடத்திச் செல்லப்பட்டார் சல்வடோர் அரசு கைது செய்துள்ள கிளர்ச்சியாளர்களை விடுதலை செய்யவேண்டுமென்பது அவர்களது கோரிக்கையாகும்.

இக்கோரிக்கையை நிறைவேற்றச் செய்யும்வகையில் மேலும் டுவாட்டே குடும்ப அங்கத்தவர்களைக் கடத்த அவர்கள் திட்டமிட்டனர். இதனையடுத்தே திரு டுவாட்டேயின் ஏனைய மூன்று புதல்விகளும் நேற்று அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். (இ)

* * *

## சிரியா கரையில் அமெரிக்க பயணியின் சடலம்?

டமஸ்கஸ், அக். 15

சிரியாவின் கடற்கரையில் வயோதிபர் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் கடந்த வாரம் இத்தாலிய பயணிகள் கப்பலில் கொலையுண்ட அமெரிக்கப் பயணி லியோன் கிளிங் ஹொப்பருடையதாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாலிய கப்பல் அக்கேலேளரோ ரோமில் திரு. ஹொப்பரைக் கொலை செய்து அவரது சடலத்தைக் கடத்தல் காரர்கள் கடலில் வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே சிரியாவில் கரையொதுங்கியது அமெரிக்கரின் சடலம் தானா என்பதை ஊர்ஜிதப்படுத்த இத்தாலிய வழக்கறிஞர் ஒருவர் சிரியா சென்றுள்ளார். கொலையுண்ட அமெரிக்கப் பயணி கால்கள் முடமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

* * *

## பாப்பரசர் கொலை முயற்சி சந்தேகநபர் மரணம்!

அங்காரா, அக். 15

பாப்பரசரைக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட துருக்கிய சந்தேக நபர் ஒருவர் மாரடைப்பினால் மரணமானார்,

இவர் துருக்கியில் சிறை வைக்கப்பட்டிருந்தார். இவருடன் வேறு மூன்று துருக்கியர்களும், ஒரு பல்கேரிய நாட்டவரும் இக்கொலை முயற்சி தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

இச் சந்தேக நபர்களில் ஒருவரான அலிஅக்கா என்ற துருக்கியர் இத்தாலியில் காவலில் வைக்கப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (இ)

### கனடாவில் வி. பி.

(சென்னை)

திரு. வி. பொன்னம்பலம், கனடா சென்றுள்ளார்.

கனடாவிலுள்ள தமிழ் அமைப்புக்களுடன் கலந்தாலோசிக்கவே அவர் சென்றுள்ளார்.

### பாசறை வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் குழுக்களின் இவ்வாண்டிற்கான பாசறை வைபவம் இம்மாதம் 26 ம், 27 ம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக உதவி மாவட்ட ஆணையாளர் திரு. நா. நல்லையா தெரிவித்துள்ளார். இப்பாசறை யாழ். பழைய பூங்காவில் இடம் பெறும். (ச)

...யில் நடைபெற்ற இவ் வைபவத்தில் முதற்பிரதியை நல்லை ஆதீன தொண்டர் திரு. இ. சுவாமிநாதனும் இரண்டாவது பிரதியை பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. இ. பாலகிங்கமும் வழங்கினர். (ச)

### அருள் நெறித் திரட்டு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடாக அருள் நெறித்திரட்டு என்னும் நூல் வெளியாகியுள்ளது.

வாழ்வின் பெரும் பகுதியை முறையாக வாழத்தவறவிட்டதனால் ஏற்பட்ட நிலையைச் சீர்செய்ய விரும்பிய ஒருவர் தனக்கு திருப்தியளித்த நூல்களில் ஞாபகத்திலிருத்துவதற்கென குறித்த குறிப்புக்களே நூலாக உருப்பெற்றுள்ளது.

ஆன்மீகவாழ்வில் முன்னேற விரும்புவர்களுக்கு அருமையான குறிப்புகளைத்தொகுத்த நூலாசிரியர் அடக்கம் காரணமாக தன் பெயரை வெளியிடாத போதும் இந் நூலாசிரியரும் காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகமும் நம் சமூகத்தின் பாராட்டை பெறுவது உறுதி.

சமய உண்மைகள் — அநுபவங்களைப்பற்றிய விளக்கங்கள் இந் நூலில் பரவலாக இடம் பெற்றுள்ளன. (ப)

### மணிவாக்கு

தொடர்பு மட்டும் இருந்து மாற்றம் இல்லாமல் போகுமானால் சமுதாயம் தேக்கமுற்று நசிந்துபோகும். மாற்றம் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடுமோனால் நாட்டின் ஆணிவேரே ஆட்டம் கண்டுவிடும்.

—ஜவஹர்லால் நேரு

# நமது நோக்கு

## வேறுபாட்டை விளங்கிக் கொள்ளவேண்டும்

'ஓடலாம் ஒளிக்க முடியாது' என்ற எச்சரிக்கையை பயங்கரவாதிகளுக்கு - சர்வதேச பயங்கரவாதிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி றீகன் விடுத்திருக்கிறார்.

'அடிக்குப்பதிலடி' என்று முன்னர் விடுத்த அறிக்கைக்கு இந்த எச்சரிக்கை உடன்பாடாயுள்ளது.

கெரில்லா யுத்தம், தரையில் மட்டுமல்ல, கடலிலும், ஆகாயத்திலும் விரிவடைவதை நாம் காண்கின்றோம்.

இத்தாலிய பயணக்கப்பலைக் கடத்திய நாலு பாலஸ்தீனியர்களை ஏற்றிச்சென்ற எகிப்திய விமானத்தை அமெரிக்க போர் விமானம் இடைமறித்தது. அது கடத்தல்காரரை ரோமில் ஒப்படைத்தது. கடத்தல்காரர் நால்வரின் தலைவர் அபு அபாஸை தமது நாட்டிடம் ஒப்படைக்கவேண்டுமென அமெரிக்கா கேட்டிருந்தது. அதனை நிராகரித்து இத்தாலிய அரசு அமெரிக்கா ஆத்திரம் கொண்டுள்ளது.

பாலஸ்தீனிய தலைவர் அபு அபாசுக்கு எதிராக, கடத்தல், சதி, கொலை என்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி ஒரு பிடிவிறாந்தை அமெரிக்கா இத்தாலிக்கு அனுப்பியிருந்தது.

கடத்தப்பட்ட கப்பலில் இருந்த வலது குறைந்த ஒரு அமெரிக்க பயணி கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாலிய சட்டத்தின்படி அபு அபாசுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாதென்பதால் அவரை வெளியேற அரசு அனுமதித்தது. அவர் உடனே யூகோசிலாவியா பயணமானார்.

அந்த நாட்டுக்கும் இதே கோரிக்கையை அமெரிக்கா விடுத்தது. யூகோசிலாவியாவும் இத்தாலியைப்போல அதனை நிராகரித்தது.

சிக்கல் சாமான்யமானதல்ல. யூகோசிலாவியா இன்னும் பல நாடுகளைப் போல பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு முழுராஜ்ய அந்தஸ்து வழங்கயிருக்கிறது இன்று அங்கு தங்கியிருக்கும் பாலஸ்தீனவிடுதலை இயக்கத்தலைவர் அந்த நாட்டுக்குள் அவர் விரும்பிய இடத்துக்கு செல்லமுடியுமென்று அமெரிக்காவிற்கு அறிவித்துள்ளது.

இச்சம்பவம் எவ்வகையில் எமக்கு கருத்துடையதென்பது அவசியம்.

எங்கும் பயங்கரவாதம், அதனை முறியடிக்க றீகனின் கங்கணம் கட்டுவதும் அதற்கு பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் பக்கபலமாக இருப்பதும் எவரும் அறிந்ததே.

இன்று மத்திய கிழக்கில் மட்டுமல்ல வேறுபல இடங்களில் பரவிவரும் கடத்தல் பயங்கரவாதம் அதிகரித்து வருகிறது;

இது இன்று அமெரிக்காவிற்கு எதிராக உள்ளது என்று ரஷ்யா மகிழ்ச்சியடையும் என்று நினைப்பது தவறு.

'நாளைக்கு' உங்களுக்கும் இதே கதி என்று சொல்ல முன்னரே, நாலு ரஷ்யப் பிரஜைகள் கடத்தப்பட்டு ஒருவர் கொல்லப்பட்டார்; மூவர் இன்று பெருட்டில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பயங்கரவாதம் விடுதலைவாதம் என்ற இரண்டுக்கும் வேறுபாடு காணவேண்டிய நிர்ப்பந்தம் இன்றைய கடத்தல் நாடகம் ஏற்படுத்தி இருக்கிறது.

ஒரு அமெரிக்க பிரஜை கொல்லப்பட்டதை பெருங்கொடுமையாக றீகன் கொள்வதில் பாதகமில்லை. அக்கப்பலில் இன்னும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம். அது உண்மையில் பயங்கரவாதம், விடுதலை இயக்கமென்று தம்மைக் கூறிக்கொண்டாலும், நடத்தது எத்தனித்தது பயங்கரவாதம்.

அதனைத் தடுக்க அமெரிக்கா எடுத்த நடவடிக்கை நியாயமானதா?

ஆத்திரத்துக்கோ, அவசிய தேவைக்கோ சட்டமில்லை என்றொரு வாசகம் உண்டு:

அதனை நியாயப்படுத்தி அமெரிக்க யுத்த விமானம் நடத்திய சாதனையை ஆதரிக்கலாமா?

விண்வெளிப் போரில் அமெரிக்காவுக்கு வெற்றி என்று சொல்வதா? அல்லது இன்னொரு ஆகாயக் கொள்ளை என்று வர்ணிப்பதா?

இதனை முன்மாதிரியாகக் கொண்டால் சர்வதேச பயங்கர வாதம் எவ்வாறு ஒழியும்.

சுத்தபயங்கரவாதம்வேறு விடுதலைப் போராட்டம் வேறு! ஆயுதம் தாங்கிய போதும் தமிழ் போராளிகள் இத்தகைய செயல்களில் ஈடுபடாத விடுதலை இயக்கம் என்ற வேறுபாட்டை ராஜீவ் திருமதி தாட்சருக்கு விளக்குவார்.

# ஒவ்வொரு தனிமனிதனிடமும் இலக்கியம் இணைந்து காணப்படுகின்றது!

## கருத்தரங்கில் உரை

(யாழ்ப்பாணம்)

''அரசியல் வரலாறு என்றாலும் சரி ஆத்மீக வரலாறு என்றாலும்சரி அவை இலக்கியச் சுவையுடனேயே மக்களிடையே உணர்த்தி வரப்படுகின்றன. இன்று கலாசார நிகழ்ச்சிகள் மூலமும் அரசியல் உணர்வுகள் புகட்டப்பட்டு வருவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. உலகப் பொதுநூலாகிய திருக்குறள்கூட இலக்கியத்துடன் கூடிய அறநூலாகவே கருதப்படுகிறது.''

இவ்வாறு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வட்டுக்கோட்டை இலக்கிய வட்டத்தின் இலக்கியகருத்தரங்கில் தலைமை வகித்துப்பேசிய திரு ஜி. இதம்பரநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''மாணவர்களுடன் மட்டுமல்ல ஒவ்வொரு தனி மனிதனுடனும் இலக்கியம் இணைந்து காணப்படுகிறது. சிறுகதைகள் மூலம் நடக்கப் பேசுகின்ற சம்பவங்களை நாவலாசிரியர்களுடைய அனுபவரீதியான கற்பனைகள் மூலம் வெளிப்படுத்துவதனால் முன் கூட்டிய எச்சரிக்கை நிகழ்ச்சிகள் வாழ்க்கைக்கு தற்பாதுகாப்பாக அமைகின்றன'' என்று குறிப்பிட்ட அவர் சிறுகதைகளையாக்கும் போது சமுதாய முரண்பட்ட செயற்பாடுகள் வெளிப்படுவதனால் மக்கள் மத்தியில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறதெனவும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சோ. கிருஷ்ணராசா பேசுகையில் ''இலக்கியம் காலத்தின் கண்ணாடி. மொழியின்றியோ அனுபவமின்றியோ கற்பனை ஏற்படமுடியாதென்றும் அண்மையிலே பார்த்து ரசித்த 'மண்சுமந்த மேனியர், மனரும் புதுயுகம்' போன்ற நாடகங்கள் சமகால நிகழ்ச்சிகள் மூலம் படம்பிடித்துக்காட்டுகின்றன'' என்றும் குறிப்பிட்டார்.

திருமதி கோகிலாமகேந்திரன் சமகாலபிரச்சினைகளில் பெண்களின் கலை இலக்கிய பங்களிப்பு என்ற தலைப்பில் பேசுகையில் ''மனிதனை மனிதன் அழிக்கும் கீழ்த்தனமான தன்மை குடும்பத்தில் ஆரம்பித்து சமுதாயத்தில் வளர்ந்து இனத்தில்விரிவடைந்துள்ளது. இப்படியான பிரச்சினைகளை முகம்கொடுத்தல் மூலமே உளவியல்ரீதியாக தீர்க்கலாமென குறிப்பிட்ட அவர் எழுத்தின் மூலம் எண்ணங்களை மாற்றலாம் ஆனால் அறிவுபூர்வமான நிலைப்பாடு மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டுமென வலியுறுத்திப் பேசினார்.

தமிழ் இலக்கியவரலாற்றில் எமது தமிழினம் என்ற தலைப்பில் உரையாற்றிய ஆசிரியர் திருமதி க.ஞானேஸ்வரன் 'கிளைத்தினைக்கொல்வானைக் கமைப்போம்' எனப் பாடிய பாரதியார் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டிய ஒருவரென ஆதாரங்களுடன் வலியுறுத்திப் பேசினார்.

ஆசிரியர் திரு. ந. சிவசண்முகமூர்த்தி பேசுகையில் இலக்கியமென்பது இலட்சியை நோக்கு என்ற உண்மைகளை உணர்த்தி நாட்டார் பாடல்கள் வாயிலாக உதாரணம் காட்டி ஈழம் என்ற சொல் எவ்வாறு தோன்றியது என்பதற்கான வரைவிலக்கணத்தையும் வரலாற்று ரீதியில் விளக்கினார்.

பலநூற்றுக்கணக்காரோர் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள், எழுத்தாளர்கள், நாடகக்கலைஞர்கள் உட்பட பலர் உரையாற்றினர். (ச)

# மக்கள் கருத்து

## குல்தீப்நாயர்

ஐயா,

உங்கள் 3-10-85 ஆசிரியத் தலையங்கம் மிகவும் புதுமையானது. மக்கள் தடம் புரளாமல் இருப்பதற்கு நல்ல வழிகாட்டியாகவும் உள்ளது. கடந்த சனிக்கிழமை குல்தீப் நாயர் எழுதிய கட்டுரையை நான் வாசித்ததும் மிகவும் கலைப்புக்குள்ளானேன். உங்கள் தலையங்கம் படித்ததும் அம்மலைப்பு நீங்கியது. அதற்கு மிகவும் நன்றி;

நாற்பது, ஐம்பதுகளில் தமிழ்மக்களின் பேராதரவைப் பெற்ற ஓர் அரசியல் கட்சியின் கூட்டங்களில் அதன் சிறப்புக் கூட்டங்களில் ஒரு படித்தவர் முக்கிய பேச்சாளராக மிகவும் கவர்ச்சிகரமாகப் பேசுவார்; காலம் மாறியது சில காலத்தின் பின் யாழ்ப்பாணத்தில் ஓர் தனிநபர் கட்சிக் கூட்ட மேடைகளில் மதிப்பிற்குரிய பேச்சாளர் அடிக்கடி தோன்றினார். எனது நண்பர் ஒருவரிடம் இதுபற்றிக் கலந்துரையாடினேன். இப்படிப்பட்டவர்களுக்குக் கொள்கையோ, இலட்சியமோ இல்லை; காசுக்காகப் பேசுபவர்கள். நல்ல பேச்சுவன்மை இருக்கின்றது: காசு கொடுத்தால் எந்த மேடையிலும் பேசுவார்கள் என்றார். உங்கள் தலையங்கத்தைப் இச்சம்பவ நினைவு பொறிதட்டியது. ஜனநாயகம் தப்பிப் பிழைக்க எவ்வளவு இடர்ப்பாடுகள்! மக்களின் இடைவிடாக் கவனமே அவர்களைக் காப்பாற்றவல்லது. உங்களுக்கு மீண்டும் எமது நன்றி.

இ. செ. தியாகராசா,
கிளிநொச்சி.

# தருமரின் மறைவு

## தமிழனின் சாபக்கேடு

நாலு வாரங்களுக்கு முன் நாம் ஒரு நல்லவரை இழந்தோம். நாலுபேருடன் நயமாக பழகி மகிழும் ஒரு நாயகனை இழந்தோம்; ஈழத் தமிழ்மக்கள் இனிய ஒரு தலைவனை இழந்தனர். முற்போக்கு இயக்கம் ஒரு முன்னணித் தலைவனை இழந்தது! கலை உலகம் ஒரு கலா ரசிகனை இழந்தது. கல்வித்துறை ஒரு காப்பாளனை இழந்தது. நான் ஒரு நல்ல நண்பனை, நயத்தக்கனும் சமமாக அன்பாக பழகும் பண்பாளர்; சிரித்தமுகம் செந்தளிப்பான நோக்கு, இதமான தழுவிய பேச்சு, சிறியர் பெரியர் எனப்பாராத செம்மல் உள்ளம், யாரையும் வசீகரிக்கும் நடை இத்தகைய ஒருவருக்கு எதிரிகள் எவரேனும் இருக்க முடியுமா என்று இறுமாந்திருந்தோம்;

தமிழ்மக்களின் எதிரிகளுக்கு இதயம் குளிர்விக்கும் செயல், ஈழத்தமிழ்மக்களுக்கு இன்

### ஒரேற்றர் சி. சுப்பிரமணியம்

அன்புத்தம்பியை இழந்தேன். அந்த நாள் அருந்தமிழ் மக்களுக்கு ஓர் அழிவு நாள் ஒரு சாபக்கேடான நாள் போலும். தருமலிங்கம் அவர்கள், செல்லமாக நாங்கள் அழைக்கும் இலங்கையர் அவர்கள் தயாள சிந்தை உடையவர். பாருட்டறைய விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் இதயத்தில் பசசிப் ஈட்டி, பெருங்குடியில் பிறந்து செழுமையில் வளர்ந்தாலும் செருக்கும் சினமும் அறவே நீக்கி எளிமையில் வாழ்ந்தார்; சமதர்ம நெஞ்சம் படைத்தவர். வசதியில்லாதவர்களுக்கு இல்லை என்னாது வாரிவழங்கியவர்: தமது செல்வத்தில் பெரும் பகுதியை தமிழ்மக்களின் நல்வாழ்வுக்கான இயக்கங்களுக்கு செலவிட்டார். சிறுபான்மை தமிழர்களுக்கு கல்வி சமவாய்ப்புக்கள், தன் அடிப்படை உரிமைகள் எல்லாம் வழங்க அயராது உழைத்தவர் யாழ். இந்து ஆங்கிலக் கல்லூரிகளில் வைதீகத்தில் வளர்ந்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரிதான் முதன் முதல் சிறுபான்மைத் தமிழ் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திலும் அன்னவிடுதிச்சாலையிலும் அனுமதித்தது இச் சாதனையை நிறைவேற்றுவதில் எங்களுக்கு உறுதுணையாக இருந்தவர் தருமர்.

கருத்து வேறுபாடுகளுக்கு எப்போதும் மதிப்புக்கொடுத்

(5 ம் பக்கம் பார்க்க)

## சபாஷ் சென். சாள்ஸ்!

யாழ்ப்பாணம் சென்றல், கொக்குவில் இந்து பழமையும் பெருமையுமுடைய கல்லூரிகள் மட்டுமல்ல; விளையாட்டில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் அகில இலங்கையிலுமே முன்னணிவகிக்கும் தரம் பெற்றவை.

இவ்வருடம் நடைபெறும் மாவட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்சாள்ஸ் மகாவித்தியாலயம் இவ்விருவரையும் தோற்கடித்தது மெச்சுதற்குரிய அரிய சாதனை.

பாடசாலைகள் அரசாங்க நிருவாகத்தில் வந்தபோது எம்மிற் சிலர் கைக்குரல் எழுப்பினர். ஆயிரக்கணக்கில் பாடசாலைகள் அரசாங்க நிருவாகத்தில் வரும்போது பல தொல்லைகள் உருவாகும். இன்றும் இவற்றுள் பல நீங்கினபாடில்லை.

ஆனால் பாடசாலைகள் நாட்டின் மக்களுக்கு எவ்வித பாகுபாடுமின்றி கல்வி அளிக்கவேண்டுமென்ற அடிப்படைப் பொறுப்பு அரசுக்கே உரியது.

அதே அடிப்படை உரிமை நிறைவேறியதால் இன்று சென். சாள்ஸ், யாழ். சென்றல், கொக்குவில் இந்து எல்லாம் ஒரு இனம் ஒருதரம் என்ற கொள்கை விருத்தியடைகிறது.

அக் கொள்கை உண்மையானதே என்று நிரூபிக்கும் ஒரு சம்பவமே நாம் குறிப்பிடும் வெற்றி.

150 வருட சேவையில் திகழும் கொழும்பு றோயல் என்றும் 'றோயலாக' இருக்கவேண்டுமென அக் கல்லூரியின் பழைய மாணவருடன் சேர்ந்து நாமும் வாழ்த்துகின்றோம்;

அதேசமயத்தில் சென். சாள்ஸ் மகாவித்தியாலயம் போன்ற தேசிய பாடசாலைகள் றோயல் போன்ற பாடசாலைகளை எட்டிப் பார்க்கமுடியாத பல்லாயிரக்கணக்கான மாணவர்களை நிறம்படப் பயிற்றும் தரமுடையதாக வேண்டுமென்று விரும்புகின்றோம். அந்த விருப்பம் நிறைவேறுமென்பதற்கு இவ் வெற்றி அறிகுறி.

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—30(1985-10-16)
கிழமை—புதன்கிழமை
திதி—துதியை காலை 6-14 வரை
மேல் திருதியை
நக்ஷத்திரம்—விசாகம்

மேடம்:- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். களவிர வழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு. புதிய நண்பர்கள் சேருவார்கள்.

இடபம்:- சிறு விடயங்கள் கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம். வீணான சந்தேகங்கள் தோன்றக்கூடும். உங்களைச் சிக்க வைப்பதற்காக சூழ்ச்சிவலை விரிக்கப்படும்.

மிதுனம்:- மேம்பட வாழ்வீர். பிதாவழித் தனமும் கிடைக்கும். நீண்ட நாள் ஆசை இன்று பலித்திடும். தரமான தினம்.

கடகம்:- வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும். தொழில் துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். திடீர் வரவுக்கு இடமுண்டு.

சிம்மம்:- வணிகத் துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

கன்னி:- அவசரம் வேண்டாம். ஆயுத பீடைக்கும் இடமுண்டு. நிலை, நிதானம், அமைதி உன் காவலாகுக.

துலாம்:- எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். பொருள் செலவுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்:- முந்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும். கற்றதனால் பயனுமுண்டு.

தனுசு:- தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்த கால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக் கெடுப்பதற்குச் சிலர் முனைவர்.

மகரம்:- வாகன விருத்தியுடன் இலைத்தில் திருப்தி காணும். முன்னேற வழியும் தோன்றும்.

கும்பம்:- செய்தொழிலாற் சிறப்புக் கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. வெளியூர் செய்திக்கும் இடமுண்டு.

மீனம்:- பகை மூட்டம் தோன்றும். பதற்றம் உடன் சேரும். மிகையான போக்கினால் மனதும் பாழாய்ப் போகும்.

**திருமலை வே. ரவீந்திரன்**

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணி வீதி, 85ம் இலக்கத்தில் வசித்த காலஞ்சென்ற வைத்திய கலாநிதி பேரன் ஞானேஸ்வரம் சோமசுந்தரம் என்பவரின் மரண சாதன சொத்துகள் விடயமாக

வழ: இல: தத்துவம்/3913
மரணமெய்தியவர்

ஜோன் ரட்ணசோதி
இரேனியன் ஹவுஸ், இல. 85, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**க. நாகேந்திரன்**
பதிவாளருக்காக

வரைந்தது.

**செ. யு யேம்ஸ்**
மனுதாரின்
சட்டத்தரணி. 1255

## பெயர் மாற்றம்

பருத்தித்துறை கடற்கரை வீதியில் வசிப்பவராகிய சின்னப்பு சியாமளாகௌரி ஆகிய நான் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் சி. அழகேஸ்வரி என்றே பதியப்பட்டுள்ளது. ஆனால் நான் சியாமளாகௌரி என்றே பாவித்து வருகின்றேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இதுவே எனது கையெப்பமுமாகும்.

சி. சியாமளாகௌரி,

1258

## கண்காணிப்புக் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: ''தமிழ் நாட்டில் ஒன்றரை லட்சம் தமிழ் அகதிகள், இலங்கையிலிருந்து வந்து தங்கியுள்ளனர். இலங்கையிலும் சுமார் 2லட்சம் தமிழ் அகதிகள், சொந்த இடங்களிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் தங்கியுள்ளனர். இவர்கள் மக்களும் சிறிதளவில் அகதிகளாக இருக்கின்றனர்.

''சொந்த இடங்களிலிருந்து குடிபெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ள அகதிகளை மீண்டும் சொந்த இடங்களில் குடியேற்றச் செய்வதனால் அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் நல்லெண்ணம் தோன்ற வழிபிறக்கும்.

''போர்நிறுத்தம் நீடிக்கப்பட்டுள்ளதை சகல போராளிகள் இயக்கங்களும் வரவேற்றுள்ளன.

இலங்கையிலும் இந்தியாவிலும் அகதிகளாக இருப்பவர்களை உடனடியாக அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதன்மூலம் போர் நிறுத்தம் பெரும் வெற்றியளிக்கும்' என்றும் உமாமகேஸ்வரன் மேற்படி பேட்டியில் தெரிவித்துள்ளார்.

'போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தமிழ் மக்களுக்குப் பாதகமானதாகும் இக்குழுவில், கூடுதலாகப் பெரும்பான்மை இனத்தவர்கள் அங்கம் வகிப்பதால் தமிழ் மக்களுக்கு இது சாதகமாக இல்லை' (ஈ)

## நேரடித்தலையீடு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: ''இந்திய அரசு கெரில்லா பயிற்சி பெற்ற 10.000 இளைஞர்களை எமக்குத் தரவேண்டும். இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு ஆயுதம் வழங்குவதன் மூலம் இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினையில் நேரடியாக தலையிட வேண்டும்.'' (ஈ)

## இலங்கை விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவுல் ஹக் டிசம்பர் மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வார்.

## நிபந்தனைகளைச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து பத்தோரபஸ்து அமைச்சின் செயலாளர், யாழ். அரசாங்க அதிபர் மூலமாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, முதலாவது கூட்டம் புதன்கிழமை (இன்று) காலை நடைபெறவிருப்பதால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் கா. சிவத்தம்பியை அனுப்பிவைக்கும் படியும், அதற்கான பிரயாணச் செலவை தாம் ஏற்றுக்கொள்வதுடன் விசேட விமானம் ஒன்றை அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்ததன் பேரிலேயே தாம் செல்வதாகவும் பேராசிரியர் சிவத்தம்பி தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமாக அரசாங்க அதிபரிடமிருந்து தமது நியமனக் கடிதம் ஒன்றும் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

தமது நியமனம் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பின்னர் நேற்றுப் பிற்பகல் யாழ். பிரஜைகள் குழு, இணைப்புக்குழு ஆகியவற்றுடன் பேராசிரியர் சிவத்தம்பி, கண்காணிப்புக் குழு நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆலோசனை நடாத்தினார்.

பயங்கரமான சூழலின் மத்தியிலேயே கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டி நேரிடும் என்று தெரிவித்த பேராசிரியர் கண்காணிப்புக் குழுவின்வேலைகள் ஆரம்பமான பின்னர் எவ்விதம் தாம் ஆயுதப்படையினரால் மதிக்கப்படுவது பற்றி சற்றுப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என்றும் தமக்களிக்கப்படும் சகல சலுகைகளும் தமிழ்ப் பொதுமக்களுக்கும் கிடைக்க வழி சமைப்பேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி இன்று காலை பலாலி விமான நிலையத்திலிருந்து விசேட விமான மூலம் கொழும்பு விரைகிறார். திருகோணமலையிலிருந்து மற்றொரு கண்காணிப்புக்குழு உறுப்பினரான திரு கே. சிவபாலனும் இன்று காலை கொழும்புசெல்கிறார்.

## தருமரின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம். அவ் வேறுபாடுகள் செழிப்பான சிறந்த கருத்துகளுக்கு வழிகோலும் என்பதில் உறுதியான நம்பிக்கை. ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முகாமையாளராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்தார்' கல்லூரியில் பல்வேறு அரசியல் கருத்துக்களையுடைய ஆசிரியர்கள் பணிபுரிந்தனர் இருந்தும் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்கொள்கைகளை அவர்களுக்குத் திணிக்கவோ அல்லது பழிவாங்கியவரோ இல்லை

அவரிடம் எப்போதும் நிதானமான, கண்ணோட்டம், நீதியான போக்கும் இயல்பாய் அமைந்திருந்தன. உணர்ச்சிவசப்படாது அறிவியல் வழியில் இந்தியப்பார் சர்வதேச விவகாரங்களை எப்பொழுதும் நன்கு படித்தவையாக அவற்றில் ஆழ்ந்த அறிவு அவர்பால் இருந்தது.

தமிழ் ஈழப்பிரச்னையை இன்றைய முதலாளித்துவ அமைப்பில் தீர்க்க முடியாதென்றும் சோஷலிச அமைப்பின் கீழ்தான் அதை முற்றாகத் தீர்க்கலாமென்றும் அவர் திடமாக நம்பினார்

அமரர் தருமரின் அகால மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் படிப்பினையாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் எமது ஒற்றுமையைக் கட்டி வளர்த்து எதிரிகளை ஒழித்து எமது இலட்சியத்தை நோக்கி வீறுநடைபோட்டு முன்னேறுவோமாக

தம்பி தருமரின் ஆன்மா சாந்தியடைய நாம் செய்யக்கூடியது இதுவன்றி வேறல்ல.

# அரசு ஆதரவாளர் வீடும் தகர்க்கப்பட்டது

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கூட்டு ஆயுதப் படையின் முகாமுக்கு அருகாமையிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரின் வீடு ஆயுதப் படையினரால் தகர்க்கப்பட்டதாக அங்கிருந்தவர்களும் அகதிமுகாம்களில் தங்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஐ. தே. க. ஆதரவாளரான கராவிக்கம் என்பவர் ஆறு மாதங்களுக்கு முன்னர் 'சமூக விரோதி' எனக் கணிக்கப்பட்டு இனந்தெரியாத இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

கூட்டு ஆயுதப்படை முகாமுக்கு அருகாமையிலுள்ள வீடுகள் அழிக்கப்பட்டபோது மேற்குறிப்பிட்ட ஆதரவாளரின் வீடும், கடையும் தகர்க்கப்பட்டதாம். (மா)

# கிறிஸ்தவக் கல்லூரி கொத்தணி பாடசாலையாகிறது

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி இம் மாதம் முதல் கொத்தணிப்பாடசாலையாகச் செயற்படுகின்றது. இக் கல்லூரியின் கீழ் கோப்பாய் கிராமத்தின் பத்துப் பாடசாலைகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. கோப்பாய் கல்விவட்டாரத்தில் [கோப்பாய் கிராமத்தின் முன்னோடித்திட்டமாக அமுலாக்கப்படும் இக் கொத்தணிப் பாடசாலை கட்டிணைப்பினை சம்பிரதாயபூர்வமாக இன்று புதன்கிழமை வட மாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிவசம்பிள்ளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றார்.

கிறிஸ்தவக் கல்லூரியில் இடம் பெறும் இந்த வைபவத்தில் வட மாநில கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம், கிறிஸ்தவக் கல்லூரியின் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. க. இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளுகின்றார்கள்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கொத்தணிபாடசாலைக் கட்டிணைப்பு ஏற்கனவே புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் செயற்படுத்தப்படுவது தெரிந்ததே. (அ)

# அதிர்ச்சி தாங்காது விவசாயி மரணம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் முகாமில் இருந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான விவசாயி ஒருவர் தமக்கு நேர்ந்த இழப்புகள் குறித்து அதிர்ச்சியுற்று மரணமானார்.

நவாலி - இடிகுண்டடி என்னும் பகுதியில் உள்ள அகதிகள் முகாமில் இருந்த ஆறுமுகம் (58 வயது) என்பவரே திடீர் மரணமானவராவார்.

வவுனியாவில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது இவரது பெறுமதிவாய்ந்த சொத்துடைமைகள் சூறையாடப்பட்டதாகவும் வீடு அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவாலி பிரஜைகள் குழு இறந்தவரின் மரணச் சடங்குக்கான செலவுகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இன்ரசிற்றி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கில் பெண்கள் சிறுவர்கள்உட்பட பிரயாணிகள் ஏராளமாக வந்திருந்தனர்.

ரயிலுக்கு பாதுகாப்பு எதுவும் இருக்கவில்லை என்றும் வழியில் சிலரயில் நிலையங்களில் ஆயுதப் படையினர் பாதுகாப்பாக நின்றனர் என்றும் பிரயாணிகள் தெரிவித்தனர். நேற்றுக்காலை சுமார் நானூறுபேர் கோட்டையில் டிக்கட் கிடைக்காமல் திரும்பினர்.

இந்தரயிலில் நேற்று தபால் பைகள் எதுவும் வரவில்லை. தபால்பைகள் இனிமேல் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறப்படுகிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இன்ரசிற்றி சேவை ஆரம்பமாகும். (க)

## மக்களை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது மண்ணிலேயே வாழ்வதற்கு பீதியும் பதற்றமும் கலக்கமும் அடைந்துள்ளதாகவும்.

இச் சம்பவங்களை உற்று நோக்குகையில் இவையாவும் நன்கு திட்டமிடப்பட்ட ஒரே குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டு வருவது தெளிவாகியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இப்பயங்கரவாத நடவடிக்கைகளை விடுதலையை விரும்பும் எந்தவொரு ஸ்தாபனமும் மேற்கொண்டிருக்க மாட்டாரென நாம் நம்புவதாகவும், எனினும் இச் செயல்களை தமிழ்ஈழத்தில் தொடர்ந்து கட்டுப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பிலிருந்து எந்தவொருவிடுதலை ஸ்தாபனமும் ஒதுங்கிவிட முடியாதெனவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. (ச)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜனரத்தினம் மகா வித்தியாலயத்திற்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான 17வயதுக்குட்பட்டோர், 15 வயதுக்குட்பட்டோர் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று சென். ஜான்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ச)

## உலக உணவுதினம்

(சுண்டுக்குளி)

வட்டுக்கோட்டை பெண்கள் சமூகத்தின் ஆதரவில் உலக உணவு தினமான இம்மாதம் 16ம் திகதி (இன்று) பண்டத்தரிப்பு வாழ்வெளி நிலையத்தில் நிலைய இயக்குநர் அருட்செல்வி தாயார் பூலாவி தலைமையில் மரம் நாட்டும் வைபவம் நடைபெறும்.

## மட்டுப்படுத் தப்பட்ட மின்விநியோகம்

(கொழும்பு)

மன்னாரில் மட்டுப்படுத்தப்பட்ட மின் விநியோகம நடைபெறுகின்றது.

பகலிலும், இரவு ஏழு மணிக்கும் எட்டு மணிக்கும் தவிர்ந்த நேரங்களில மின்சாரம் வழங்கப்படுகிறது.

மன்னாருக்கு எரிபொருள் கொண்டு செல்லப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

# 'தர்மர், ஆலால் கொலைகளுக்கும் புலிகளுக்கும் தொடர்பே இல்லை'

## தலைவர் பிரபாகரன் ஆணித்தரமாக மறுப்பு



[தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வி. தர்மலிங்கம், மு. ஆலாலசுந்தரம் ஆகியோரின் மரணங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பதை மேற்படி இயக்கத்தின் தலைவர் திரு. பிரபாகரன் ஆணித்தரமாக மறுத்துள்ளார். கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஸண்டே' வார (அக்டோபர் 5ம் திகதி) இதழுக்கு அளித்துள்ள அவரது பேட்டியின் இன்னொரு பகுதி இது.]

(நேற்றைய தொடர்ச்சி)

கேள்வி: கடந்த மூன்று மாதங்களாக இந்திய அரசாங்கம், விடுதலைப் போராளிகளைக் குறித்துக் கடுமையான ஒரு போக்கைக் கடைப்பிடிக்கின்றது என்று உணர்கிறீர்களா?

பதில்: ஆரம்பத்தில் நான் அப்படி நினைக்கவில்லை; ஆனால் பாலசிங்கத்தின் நாடு கடத்தலின் பின் நான் அதை நம்ப வேண்டி இருக்கிறது.

கேள்வி: இந்திய அரசாங்கத்தின் இந்த மாற்றத்திற்குக் காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: இந்த மாற்றத்திற்கான காரணம் என்னவென்பது எனக்குத் தெரியாது. சில வேளை உலகரீதியான பிரச்சினைகளும், நெருக்கடிகளும் காரணமாக இருக்கலாம்; இந்த மாற்றத்திற்கான காரணத்தை உடனடியாக எம்மால் அனுமானிக்க முடியாது. ஆனால் காலப்போக்கில் அது வெளிவரும் என்றே நான் நம்புகிறேன்.

கேள்வி: இந்தியா மிகக் கூடிய அளவில் ஸ்ரீலங்காவை சார்ந்த நாடாக மாறி இருக்கிறது என நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: இதுவரையில் இந்த அடிப்படையில் நாம் சிந்திக்கவில்லை; ஆனால் சில சம்பவங்கள் இது குறித்த சந்தேகத்தை எமது மனதில் எழுப்புகின்றன.

கேள்வி: திம்புவில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை முறிந்தபின், திரு. ராஜீவ் காந்தி உங்களை அழைத்த போது நீங்கள் ஏன் உடனடியாகப் பதிலளிக்கவில்லை?

பதில்: தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இருவரும் திரும்பிவிட்டபோதிலும் ஏனைய இயக்கங்களின் ஒவ்வொரு பிரதிநிதிகள் திம்புவில் தடுத்து நிறுத்திவைக்கப்பட்டனர். ஈழதேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் டில்லிக்கு எப்படியும் அழைத்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என இந்திய அரசு நினைத்தது. ஆனால் திருக்கோணமலையிலும், வவுனியாவிலும் இனப்படுகொலைகள் நடந்து கொண்டிருந்தன; மக்களைப் பாதுகாக்க வேண்டிய நாங்கள், இக்காலகட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பது வேடிக்கையாகாதா? யுத்த நிறுத்தத்தைத் தீவிரமாக, பொறுப்புடன் கடைப்பிடிக்க முடியாத இலங்கை அரசாங்கம் 'இனப்படுகொலைதொடர்ந்தும் நடக்காது' என்று ஒரு உறுதிமொழியும் தரவில்லை. அப்படியான சூழ்நிலையில் பேச்சுவார்த்தையை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தோம்.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இரண்டு த. ஐ. வி. கூட்டணி உறுப்பினர்களின் கொலையில் சம்பந்தமுண்டா? இந்தியாவின் புலனாய்வுத் துறை புலிகள் தான் இதற்குப் பொறுப்பு என்று உறுதியாகக் கூறுகிறதே.

பதில்: நாங்கள் இதற்குப் பொறுப்பல்ல; இந்தியப் புலனாய்வுத் துறையின் கூற்றுக்கு நாம் என்ன சொல்ல முடியும்? "நாங்கள் தான் பொறுப்பு" என்ற இலங்கை அரசாங்கத்தின் கூற்றை நாம் உடனடியாகவே மறுத்திருக்கிறோம். ஈழ தேசிய விடுதலை முன்னணியும் மறுத்துள்ளது. இந்தியாவின் புலனாய்வுத்துறை அவ்வாறு கூறினாலும், நாங்கள் இதைச் செய்யவில்லை என்பது யாழ்ப்பாண மக்களுக்கு நன்கு தெரியும். இந்தியப் புலனாய்வுத்துறை எதுவித ஆதாரமுமின்றி நாங்களே இதைச் செய்தோம் என அனுமானித்திருக்கலாம்; நான் தலைமறைவாகி இருந்த காரணத்தால் அவர்கள் இம்முடிவுக்கு வந்திருக்கலாம். உண்மையில் நாங்கள் செய்திருந்தால் அதனை ஒப்புக்கொள்வதோடு அதற்குரிய காரணங்களையும் கூறி இருப்போம். குற்றங்கள் நிரூபணமாகிய பின்பே நாம் எமது நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்; நாங்கள் செய்திருந்தால் உண்மையை மறைக்க மாட்டோம்; உதாரணமாக நாங்கள் திரு. ஆலாலசுந்தரத்தைச் சுட்ட போது (அண்மையில் கொல்லப்பட்ட திரு. ஆலாலசுந்தரம் முன்பு காலில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுடப்பட்டவர்) நாங்கள்தான் அதைச் செய்தோம் என உரிமை கோரினோம். அன்று அவசியமில்லாத காரணத்தால் அவரைக்கொல்லவில்லை. அவர் மேற்கொண்ட சமூக விரோத நடவடிக்கைகளுக்காக அவரைத் தண்டித்தோம்.

(7-ம் பக்கம் பார்க்க)


# முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை
# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களின் பிரதேசங்களுக்குள் அமைந்துள்ள, சந்தைகள், இறைச்சிக்கடைகள், ஆகியவற்றை 01-01-1986 தொடக்கம் 31-12-1986 வரை குத்தகைக்கு எடுத்து நடாத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள், 13-11-1985, மு. ப. 10-00 மணிவரை முல்லைத்தீவு அபிவிருத்திச் சபைக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப்படிவங்களை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கேள்வி வைப்புப் பணமும், கேள்விப்பத்திரப் பணமும் வங்கி உண்டியல் மூலம் 21-10-1985 மு. ப. 8-30 மணி தொடக்கம் 12-11-1985 நண்பகல் 12-00 மணி வரை அவ்வவ் உப அலுவலகங்களில் செலுத்தி, தேசிய அடையாள அட்டை மூலம் அடையாளத்தை நிரூபித்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை முல்லைத்தீவு அபிவிருத்திச் சபையிலும், அதன் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 13-11-85-ம் திகதி பி. ப. 2-00 மணிக்குத் திறக்கப்படும். விரும்புகின்ற கேள்விக்காரர்கள் அவ்வமயம் சமூகம்கொடுக்கலாம்.

| உப அலுவலகம் | விடயம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் படிவக்கட்டணம் | கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 1. முல்லைத்தீவு பட்டினம் | முல்லைத்தீவுப் பொதுச்சந்தை | 2,53,000/- | 100-00 | 5000-00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 26,500/- | 100-00 | 5000-00 |
| | ,, ,, இல. 2 | 26,600/- | 100-00 | 5000-00 |
| | ,, ஆட்டிறைச்சிக்கடை | 15,400/- | 50-00 | 3000-00 |
| 2. முள்ளியவளை | தண்ணீரூற்றுச் சந்தை | 33,700/- | 50-00 | 2000-00 |
| | முள்ளியவளைச் சந்தை | 10,850/- | 50-00 | 2000-00 |
| | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 41,005/- | 50-00 | 3000-00 |
| | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 3,150/- | 50-00 | 1000-00 |
| | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 10,800/- | 50-00 | 2000-00 |
| 3. புதுக்குடியிருப்பு | புதுக்குடியிருப்புச் சந்தை (1-1-86—31-3-86 வரை மட்டும்) | 6,000/- | 50-00 | 1000-00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை | 15,800/- | 50-00 | 2000-00 |
| | ,, ஆட்டிறைச்சிக்கடை | 3,000/- | 50-00 | 500-00 |
| | உடையார்கட்டு சந்தை | — | 25-00 | 250-00 |
| 4. ஒட்டிசுட்டான் | ஒட்டிசுட்டான் சந்தை | 1,600/- | 50-00 | 250-00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை | 9,500/- | 50-00 | 1000-00 |
| 5. ஒலுமடு | மாங்குளம் சந்தை | 16,550/- | 50-00 | 2000-00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை | 15,000/- | 50-00 | 2000-00 |
| | ,, ஆட்டிறைச்சிக்கடை | 5,000/- | 50-00 | 1000-00 |
| 6. முள்ளிவாய்க்கால் | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக் கடை | 2,600/- | 50-00 | 500-00 |
| 7. செம்மலை | குமுழமுனைச் சந்தை | 1,100/- | 25-00 | 250-00 |
| | செம்மலைச் சந்தை | — | 25-00 | 50-00 |
| | அளம்பில் சந்தை | — | 25-00 | 50-00 |
| 8. துணுக்காய் | துணுக்காய் சந்தை | 1,100/- | 25-00 | 500-00 |
| | மல்லாவி சந்தை | 5,000/- | 50-00 | 1000-00 |
| 9. பாண்டியன் குளம் | பாண்டியன்குளம் புதிய சந்தை | — | 25-00 | 250-00 |
| | ,, பழைய சந்தை | — | 25-00 | 250-00 |

மாவட்ட அபிவிருத்திச் சபை,
அபிவிருத்திச் செயலகம்,
முல்லைத்தீவு, 11-10-1985.

(1238)

க. பொன்னம்பலம்,
கேள்விச் சபைத் தலைவரும், மாவட்டச் செயலாளரும்,
முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை, முல்லைத்தீவு.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# தர்மர், ஆலால் கொலைகளுக்கும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்குக் கூட்டுறவுச் சங்க ஊழலில் பங்கிருந்தது; அதற் கான ஆதாரங்களை மக்கள் முன் வைத்தோம். அதே நேரத்தில் அவர்களின் தவ றான நடவடிக்கைகளுக்கு ஆதா ரமான பத்திரங்கள் கூட்டு றவுச் சங்கத்தில் வைத்தே எரிக்கப்பட்டன; நாங்கள் ஆனந்தராஜாவை (அதிபர், சென் ஜோன்ஸ் கல்லூரி) சுட்டபோது உரிமை கோரி னோம். சிறீலங்கா அரசு இவரைக் கொன்றவர்கள் பற் றிய தகவல்கள் தருபவருக்கு ரூபா 5 லட்சம் தருவதாக அறிவித்தது: இவ்வறிக்கை மூலம் யாழ்ப்பாண மக்கள் இவருக்கும் இலங்கை அர சாங்கத்துக்குமிருந்த தொடர் பின் அடிப்படையைப் புரிந்து கொண்டனர். அவர்கள் நாம் ஏன் இக்கொலையைச் செய் தோம் என்பதைப் புரிந்து கொண்டு அமைதியாக இருந் தார்கள்.

சிங்கள இராணுவம் எமது மக்களைக் கொலைசெய்தும் தமிழ் இளைஞர்களை பாகுபா டின்றிக் கைது செய்துகொண் டும், தமிழ் மக்களின் சொத் துக்களை எரித்தும், தமிழ் பெண்களை கற்பழித்தும் கொடு மைகள் புரிந்த வேளையில் ஆனந்தராஜா சிங்கள இராா ணுவத்துடன் துடுப்பெடுத்து ஆட்டப் போட்டியொன்று நடத்துவதற்கு திட்டம் இட் டுக்கொண்டிருந்தார்; ஸ்ரீ லங்கா அரசு: தமிழ்பொது மக்களுடன் ஸ்ரீலங்கா இராா ணுவம், மிகுந்த சிநேகபூர்வ மான உறவைக்கொண்டிருப் பதாக உலகிற்குகாட்ட இந்த துடுப்பெடுத்த ஆட்டத்தின் மூலம் பிரசாரம் செய்ய இருந் தது: இதன்மூலம் இனப்பிரச்சினை குறிப்பிட்ட ஒருசிலபோராளிக ளால் உருவாக்கப்பட்டதாகப் பிரசாரம் செய்ய இருந்தது. இதனால் அவரைக்கொலை செய்வதைத் தவிர, வேறு வழி இருக்க வில்லை.

## என் அனுமதி இன்றிநடக்காது

கேள்வி; முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் தமி ழீழ விடுதலைப்புலிகளின் ஒரு இலகலைக்கார உறுப்பினர்க ளால் கொல்லப்பட்டிருக்க முடியுமா?

பதில்: நிச்சயமாக இல்லை. எனது அனுமதி இன்றி தமிழீழவிடுதலைப் புலிகளில் எதுவும் நடக்காது: நான்சில விடயங்களை கூறிவைக்க விரும் புகிறேன். கூட்டணித் தலை வர்களை நான் சந்தித்தவேளை யில் நாங்கள் இந்தக்கொலை களைச் செய்யவில்லையென்றும் அவர்களுக்கு எம்மால் இப்ப டியான ஒரு முடிவு வராது என்றும் நம்பிக்கை தெரிவித் தேன்; ஆலாலசுந்தரத்தை முன்பு சுட்டதன் மூலம் நாங் கள் கூட்டணிக்கு எதிரிகள் என்பது அர்த்தமல்ல. அவர்க ளுக்கும் இளைய தலைமுறையி னருக்குமிடையே ஓர் இடை வெளி ஆபத்தான முறையில் உருவாகிறது என்பதைச் சுட் டிக்காட்டினேன். இளைய தலை முறை அவர்களை தமிழீழப் போராட்டத்தை கைவிட்டு விட்டவர்கள் என்றவகையி லேயே நோக்குகிறது. இந்த இடைவெளி கூடிக்கொண்டே செல்கிறது ஏனெனில் இவர் கள் தமிழ்ஈழத்தில் இல்லை; இதனால் மக்களைச் சந்திப்பது மில்லை. அதேவேளை தமிழீழத் தின் யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ள முடியாதவர்க ளாயிருக்கிறார்கள். இவர்கள் தமிழ் மக்களிலிருந்து தனித் திருக்கும்வரை இளையதலை முறையின் வன்மையான தாக் குதல்களை எதிர்நோக்கவேண் டியவர்கள் ஆகின்றார்கள். உண்மையில் யாரெனில் நான் ஈழப்போராட்டத்தைக் கை விட்டாலும் எனக்கும் இதே நிலைதான் ஏற்படும்.

கேள்வி: இளைய சமுதாயம் தமிழீழம் பெறுவதில் உறுதி யாக இருக்கும்என சொல்கி றீர்களா?

பதில்; தமிழீழத்தைத் தவிர வேறெந்தவித தீர்வும் இல்லையென்பதனையே அண் மையில் நடந்த சம்பவங்கள் காட்டுகின்றன. எத்தனையோ இடைப்படுகொலைகளை சந்தித்த பின் தமிழர்கள் தாங்கள் பாது காப்பாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு தமிழீழத்தில் தான்முடியுமென உணர்ந்தி ருக்கிறார்கள்.

கேள்வி: கூட்டணி எம்பிக் கள் கொல்லப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தான் பொறுப்பு எனச் சொல்லப்பட்டது. ராஜீவ்காந் தியின் மனதை அச்செயல் கடுமையாக்கிவிட்டது. பால சிங்கத்தின் நாடுகடத்தல் உத் தரவை ரத்துச் செய்யக்கூடிய ஒருமுடிவுக்கு வந்த பின்பும் இதனால் அவர் செய்யவில்லை

பதில்; இந்தச் செய்திக ளோடு எமக்குச் சம்மந்தம் இல்லை நாங்கள்தான் இதை செய்தோம் என்னும் கார ணத்திற்காக இந்திய அரசாங் கம் ரத்துச்செய்வதை விட்டி ருந்தால் அது தவறாகும், எங் களைத் தண்டிப்பதில் அர்த்த மில்லை. அவர்கள் உண்மை யான குற்றவாளியைத் தண் டிக்கவேண்டும். அப்படித் தண் டிப்பதன் மூலமே மீண்டும் இப்படியான சம்பவங்களை நடக்காது தடுக்கலாம்.

கேள்வி: பாலசிங்கம் நாடு கடத்தப்பட்டபோது உங்க ளுக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?

பதில்? நாம் பெருமளவில் இந்திய அரசாங்கத்துடன் ஒத்துழைத்திருக்கிறோம். அது நடந்தபோது அதுஎமக்கிழைக் கப்பட்ட அநீதி என உணர்ந் தோம். இச்சம்பவம் எமக்கி டையே ஓர் கசப்புணர்ச்சியை தோற்றுவித்திருக்கிறது.

கேள்வி: உங்களுக்கும் பால சிங்கத்திற்குமிடையிலான உறவை எப்படி வரையறுப்பீர் கள்?

பதில்: அவர் எமது அரசி யற்பிரிவு ஆலோசகர்; ஒரு தேசபக்தன் என்ற முறையில் அவர் எமது மக்களின் அபிலா சைகளை பிரதிபலிக்கிறார்.

கேள்வி: பாலசிங்கத்தை இந்தியா ஏன் நாடுகடத்தியது?

பதில்: இந்தியா பொதுமக் கள் நன்மைக்காக அவரை நாடுகடத்தியது என சொல்லி யிருக்கிறது. சொல்லப்பட்ட காரணம் கேலிக்கிடமானதாக இருக்கிறது; அவரை அனுப்பி விட்டு எம்மை பேச்சுவார்த் தைக்காக இங்கு வைத்திருப் பதென்பதில் எந்த அர்த்த மும் இல்லை;

கேள்வி: பாலசிங்கம் இல் லாமல் உங்களால் இயங்க முடியாது என்ற டெல்லியின் அனுமானம்தான் அவரின் நாடுகடத்தலுக்கு உண்மை யான காரணம் என நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: அப்படி அவர்கள் நினைப்பார்களானால் அவர்கள் பிழைவிடுகிறார்கள், தனிப் பட்ட நபர்களான பாலசிங் கத்துடனோ அல்லது பிரபா கரனுடனோ அவர்கள் செயல் படவில்லை. அவர்கள் மக்க ளின் இலட்சியத்தோடு செயல் படுகின்றார்கள்.

கேள்வி: இந்திய அரசாங் கம் நாடுகடத்தலை ரத்துச் செய்யுமென நம்புகிறீர்களா?

பதில்: நிச்சயமாக நம்புகி றேன்.

(மிகுதி நாளை வரும்)

## இந்துவில் இன்று மரம் நடுகைவிழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக்கல் லூரியில் மரம் நாட்டு விழா எதிர்வரும் 16-திகதி புதன் கிழமையன்று நடைபெறவுள் ளது. கல்வித் திணைக்களத்தின் சுற்று நிருபத்திற்கிணங்க நடைபெறவுள்ள இவ் விழா வுக்கு கல்லூரி அதிபர் திரு. வே. நாகராசா தலைமை வகிப் பார், யாழ். கல்வித் திணைக் கள விவசாயக்கல்வி அதிகாரி செல்வி. க. பெரியதம்பி இவ் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். திட்ட மிடல் உதவிப்பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந் திரன், தொழில் அதிபர் திரு. க. கனகராசா ஜே பி, யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு சு. கிருஷ் ணபிள்ளை, வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு: ப. சண்முகராசா ஆகியோரும் இவ் விழாவில் கலந்து கொள்வார்கள்.

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
Roger Moore as
James Bond in
OCTO PUSSY
திரைக்கு வராத ஜேம்ஸ் பொண்ட் சண்டைப்படம்

எம்பயர்
7 அடித் திரையில்
10-30, 2-30, 6-30,
கமலஹாசன் (இருவேடம்) ஸ்ரீபிரியா
'எனக்குள் ஒருவன்'
இரவு 9-00 மணிக்கு
'Attack Force'

ஸ்ரான்லி மினி
5'x5' திரையில்
10-30, 2-15
4-30, 6-45
Girl from India
ஒரு இந்தியப் பெண்ணிற்கு வெளிநாட்டில் கிடைத்த மறக்கமுடியாத சம்பவங்களைச் சித்தரிக்கும் படம்;
Adults Only

மனோகரா
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
டார்லிங்
Darling
டார்லிங்
பாக்கியராசு-பூர்ணிமா-ஜெயராம்-கல்லாபெட்டி சிங்காரம்
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-30,
12-10-85 முதல்
மோகன், சுபாஷினி, மூர்த்தி நடித்த
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெயசித்திரா நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
புத்தம் புதிய பிரதி

# இப்படியும் நடக்கிறது

நோர்வேயிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில்...

"......நோர்வே வருவதற்காக நான் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்குள் நுழைந்தபோது என்னையும் அறியாமல் ஓர் இனம்தெரியாத பயம் ஏற் பட்டது. தனிமை...... விமானப் பயணம்...! விமான நிலையச் சோதனைகள் அனைத்தும் முடிந்து உள்ளே பிர யாணிகள் அறையில் அமர்ந்தேன். எனக்குத் தெரிந்த ஒரு முகமாவது ஆறுதலுக்கு இருக்காதா என்று தேடி னேன்; ஒன்றுகூட இல்லை. எதை எதையோ எல்லாம் கற்பனை செய்து விம்மி விம்மி அழுதேன்; அப்பொழுது ஒருவர் நெருங்கி வந்தார்;

"நீங்கள் தமிழ்ப் பெண்போல் இருக்கிறீர்கள்...... சரிதானே..." என்று ஆரம்பித்து......

"என்னம்மா உங்களை நீண்ட நேரமாக அவதானித் தேன்; இதுக்கெல்லாம் சும்மா அழலாமா...... நீங்கள் தமிழ்ப் பொண்ணு; எதற்கும் தைரியமாக இருக்கணும்... அதிலேயும் நீங்க யாழ்ப்பாணம் என்று சொன்னபோது இன்னும் துணிச்சலாக இருக்கணும்: வெளிநாடு போக ணும்... சாதனைகள் ஏற்படுத்தணும் உங்க மண்ணுக்குப் பெருமை தேடித்தரணும்..." என்று குழைந்து குழைந்து அவர் கூறியது எனக்குத் திடீர்த் துணிச்சலைக் கொடுத்து விட்டது!

"...எனக்குத்தான் உங்க ஊருக்கு வரச் சந்தர்ப்பம் கிடைக்காட்டியும் உங்களைப் பார்த்து நாலு வார்த்தை பேசியது ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு..." என்று கூறி, 'ஊர் நலம்' பற்றி மிகவும் விசாரித்து ஒரு சிறிய அன் பளிப்பையும் வழங்கினார்: யார் அந்த நபர்? அவர்தான் இலங்கை ரசிகர்களை ஈர்த்த (தமிழக) கிரிக்கெட் டெஸ்ட் வீரர் ஸ்ரீகாந்த்..." என்று எழுதுகிறார், யாழ். வேம்படி பழைய மாணவியும், கொக்குவிலைச் சேர்ந்தவருமான செல்வி உமா ராமநாதன்.

ஸ்ரீகாந்தின் அபார கிரிக்கெட் விளையாட்டை நேரில் பார்த்து அவரைப் பாராட்ட யாழ்ப்பாண மக்கள் கொடுத்துவைக்கவில்லை என்றாலும்; தாய்நாடு செல்லும் இந்திய கிரிக்கெட் குழுவினரை விமான நிலையத்தில் சந் தித்த நேரத்திலாவது நமது சார்பாக 'உமா'வுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததும், 'உமா' மூலம் யாழ்ப்பாண மக்களுக்கு வாழ்த்துக்கள் கிடைத்திருப்பதும்... மறக்க முடியாத நமது உறவை வலுப்படுத்துவதாகவே இருக் கிறது...! இந்த நல்ல செய்தியை மறக்காமல் எமக்குத் தெரிவித்த 'உமா'வுக்கு ஒரு 'தாங்ஸ்' கூறலாமா?

— வைடூரி

காணி விற்பனவு

1. யாழ்ப்பாணம் கச்சேரி கண்டி வீதிக்கு அண்மை யாக 12 பரப்புக் காணி (பிரித்தும் கொடுக்கப் படும்)
2. யாழ்ப்பாணம் மானிப்பாய் ஒட்டுமடம் சந்தியில் மூன்று கடைக் கட்டிடங்கள் காலியான நிலையில உடன் விற்பனைக்குண்டு.

கொடுக்கப்படும் வட்டி விகிதங்கள்

| | | |
|---|---|---|
| 6 மாதங்களுக்கு | — | 18% |
| 1 வருடத்துக்கு | — | 23% |

விபரங்களுக்கு:-
J. P. T. LTD.,
3, நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

கப்பல் மாலுமி (Ship Pilot)
பதவி வெற்றிடம்

இலங்கா சீமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல் மாலுமிக்கான (Ship Pilot) வெற்றிடமொன்று உடனடியாக நிரப்பப்படவுள்ளது; விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப்பத்திரத் துடன் இலங்கா சீமெந்து லிமிட்டெட் உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்துக்கு உடன் வரவும்,

மாலுமி தலைமைச் சான்றிதழும் (Master Certificate) சேவைச்சான்றிதழ்களும் 1000 (M. Ton) மெற் றிக் தொன் முதல் 40.000 (M. Ton) மெற்றிக் தொன் வரையிலான எடையுடைய கப்பல்களைக் கட்டுவதற்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்; அத்துடன் குறைந்தது வாரத்திற்கு மூன்று கப்பல்களைக் கட்டுவ தற்கு வாய்ப்பு இருக்கும்.

உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

(1254)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# வீதி விபத்துக்களைத் தவிர்க்க போக்குவரத்துக் கண்காணிப்புக் குழு

(ஏ. வி மாணிக்கம்)

யாழ். குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகளில் இடம் பெற்றுவரும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கமாக கட்டுப்பாட்டை மீறி அதி வேகமாக வாகனங்களைச் செலுத்திச் செல்வோரைக் கண்காணிக்கவும், வாகனங்களின் அதிவேகத்தைக் கட்டுப்படுத்தவும் பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்த குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இவ்விதி விபத்துக்களைத் தடுப்பதற்கு முன்னோடியாக இணுவில் சமாதான சபை இன்று புதன்கிழமை தொடக்கம் அப்பகுதியில் - காங்கேசன்துறை வீதியில் போக்குவரத்துக் கண்காணிப்புக் குழுவொன்றைச் சேவைக்கு அமர்த்தவுள்ளது.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையைச் சேர்ந்தவர்கள் இக்குழுவில் இருப்பார்கள் என்றும் அவ்வூர் இளைஞர்கள் இக்குழுவுக்கு உதவியாக இருப்பார்கள் என்றும் இணுவில் சமாதான சபைத் தலைவர் திரு. சி. சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வலி-தெற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், யாழ் மாவட்ட சபையின் உடுவில் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ் பாலசுப்பிரமணியம் ஆகியோர் இன்று காலை இணுவில் ஆஸ்பத்திரி முன்றலில் வீதிக் கண்காணிப்புக் குழுவின் கடமையை ஆரம்பித்துவைக்கவுள்ளனர்.

அண்மைக்காலங்களில் கட்டுப்பாட்டை மீறி அதிவேகமாக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருவதால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு, பிரயாணிகளுக்குப் படுகாயங்களும் மரணங்களும் நிகழ்கின்றன.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்களும் அப்பாவிப் பிரயாணிகளுமே இந்த அவல நிலைக்குள்ளாகவேண்டிவருகின்றது.

இன்று யாழ். நகரில் ஒருவழிப் பாதை விதியை மீறிச் சகல வாகனங்களும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதனால் வீதி விதியை அனுசரித்து வரும் பிரயாணிகள் மிகுந்த அசௌகரிய நிலைக்குள்ளாகிவருகின்றனர். (மா)

# வண. பிதாசிங்கராயர் எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகவில்லை'

## பிரிகேடியர் சாட்சியம்

(கொழும்பு)

"குருநகர் இராணுவ முகாமில் முழுநேரப் பொறுப்பதிகாரியாக நான் கடமையாற்றி வந்தேன். வண. பிதா சிங்கராயர் அங்கே எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகியிருந்திருந்தால் நானும் ஓர் விதத்தில் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்"

இவ்வாறு வடபகுதி முப்படைகளின் இணைப்பு அதிகாரியாகவிருந்தவரான லெப்டினட் கேணல் ஜெனரல் ? ஜெகர் இரிக்கொருணதுங்கா நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின் போது தெரிவித்தார்.

சட்டத்தரணி லைதம்பு சாட்சியை குறுக்குவிசாரணை செய்த போது அவர் மேலும் கூறியதாவது: "தொடர்பு கொள்வதில் குறைபாடுகள் இருந்ததால் பிதா சிங்கராயர் தொடர்பான துன்புறுத்தல் எனது கவனத்திற்கு கொண்டுவரப்படாமல் இருந்திருக்கலாம்.

"இராணுவம் பொதுமக்கள் மீது நடந்துவரும் விதம் குறித்து தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வரும் துர்ரதிஷ்டவசமான காலகட்டத்தில் போது நான் இங்கு சாட்சியமளிக்கின்றேன்.

"இராணுவம் பொதுமக்கள் மீது நடந்துகொள்ளும் விதம் பற்றி சர்வதேச ரீதியிலும் பிரசாரம் செய்யப்படுவது எனக்குத் தெரியும். இராணுவம் - பொதுமக்கள் உறவு குறித்தும், மற்றும் பாதுகாப்புப் படைகள், பொது மக்கள் உறவு குறித்தும் நான் தனிப்பட்ட அக்கறை செலுத்தியுள்ளேன்.

'தேசிய பாதுகாப்புப் பிரிவில் நான் ஒரு அங்கத்தவன். 1982-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாத காலகட்டத்திலும் இராணுவத்தின் மீது அவதூறு செய்யப்பட்டிருந்தது ஆனால் இப்போது இருக்கும் அளவிற்கு அப்போது இல்லை.

"1982 நவம்பரில் இருந்த பாதுகாப்பு நிலைமை அதற்குப் பின்பு வித்தியாசமானது அன்று குருநகர் இராணுவ முகாம் தாக்குதல் ஏற்படும் நிலையிலும் இருந்தது.

14-11-1982 முதல் 31-12-82 வரை பிதா சிங்கராயர் குருநகர் முகாமில் இருந்தபோது நான் அங்கு பொறுப்பதிகாரியாக இருந்தேன். 14-11-82 அன்று பிதா இராணுவமுகாமிற்கு சுயமாகவே வந்தார்; அதாவது தமது விருப்பத்தின் பேரில்"

"அங்கு தடுப்புக்காவல் விடயத்தில் நான் தலையிடவில்லை. ஆனால் அவர்கள் நலன் பற்றி கவனித்து வந்தேன்: விசாரணைகள் முழுவதையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரே மேற்கொண்டு வந்தார்கள்."

"எனது பதவி விசேஷப் பதவி. அது வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மட்டும் ஏற்படுத்தப்பட்ட பதவி அல்ல; முழு நாட்டிற்குமே ஏற்படுத்தப்பட்ட பதவி."

அரசு தரப்பு சட்டத்தரணி சி. ஆர். த. சில்வா சாட்சியை நெறிப்படுத்தியபோது சாட்சி 'மங்கடே' (இறைச்சிக்கடை) என்ற பெயரில் அழைக்கப்படும் சித்திரவதைக் கூடம் ஒன்று நான் குருநகரில் இருந்தபோது அங்கே இருக்கவில்லை. இராணுவத்தினர் தாடி வைத்துக்கொள்ள அனுமதியில்லை. வைத்திய காரணங்களுக்கு மட்டுமே தாடி வைத்துக் கொள்ளலாம்" என்று அவர் கூறினார். (ப. பி)

கடிதங்கள் உங்கள் கைக்கு விரைவாகக் கிடைக்க

# 'மெயில்வான்' மோட்டார் சைக்கிளை திருப்பி ஒப்படைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ்தபாலகந்தோர் யாழ்ப்பாண மக்களுக்குத் துரிதமாகவும் சிறப்பாகவும் சேவையாற்ற எமதுகந்தோரிலிருந்து இனந்தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட மெயில்வான், மோட்டார் சைக்கிள், உதிரிப்பாகங்கள் பற்றறிகள் யாவற்றையும் உடனடியாகத் தந்துதவவேண்டும்" என்று யாழ் தபால்அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றனர்.

"கொழும்பிலிருந்துதபால் ரயில் வண்டி தனது தபால் சேவையை ஆரம்பித்துள்ளதால் யாழ்ப்பாண மக்களுக்கு தபால்சேவையை முன்புபோல் துரிதமாக செய்யவேண்டியுள்ளது.

"ஆனால் தபால் கந்தோரில் தற்சமயம் ஒருவாகனமும் இல்லை. இருந்த இரு வாகனங்களில் ஒன்று இனந்தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது; மற்றொன்று உடனடியாகப் பெற்றுக் கொள்ளமுடியாத இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

"இவைதவிர கந்தோருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளையும் இனந்தெரியாதவர்கள் எடுத்துச்சென்றுவிட்டனர்; உதிரிப்பாகங்கள், பற்றறிகளும் எடுத்துச்செல்லப்பட்டவைகளில் அடங்குகின்றன; எனவே தபால் சேவையை நல்லமுறையில் நடத்துவதற்கு அவசியம் 'வான்' வண்டி தேவைப்படுகிறது. மெயில் எடுக்கவும், கொடுக்கவும் வான் அவசியம் என்பதை யாவரும் அறிவீர்கள். எனவே தயவுசெய்து வானையும் மோட்டார் சைக்கிளையும் ஏனைய உதிரிப்பாகங்களையும் பற்றறிகளையும் விரைவில் தபாலகந்தோரில் ஒப்படைக்கவும்" என வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (ஐ)

# மட்டு. நகரில் மின்கம்ப மரண தண்டனை

(கொழும்பு)

மட்டக்களப்பில் நேற்று ஒருவருக்கு மின்கம்ப மரணதண்டனை வழங்கப்பட்டது.

சடலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் குமார் நவரத்தினம் (23-வயது) என்று அடையாளம் காணப்பட்டது.

# ஈழ. தே. வி. மு. 10 அம்சக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"ஈழ தேசிய விடுதலைமுன்னணியின் 10 அம்சக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டாலேஒழியஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தை தொடரும்":

ஈ. பி. ஆர். எல். எவ். வின் ஈழம் செய்திப்பலகையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செய்திப்பலகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர் நிறுத்தக்கண்காணிப்பு தொடர்பான ஈ.என்.எல்.எவ். இன் நகல்திட்டம். பயங்கரவாத தடைச்சட்டத்தை வாபஸ்பெறு. போராளிகளை தேடியழிக்கும் வெறிச் செயலை நிறுத்து; குழுவின் தரிக்கப்பட்டதில் முரண்பாடு. செயற்பாட்டை ஆதாரித்தே கண்காணிப்பு குழுபற்றி இறுதி முடிவு. கூலிப்படைகள் ஆத்திரமூட்டாதிருந்தால் தற்காலிகமாக "இராணுவமுகாம்கள்" தாக்கப்படாது.

கைவில்லாச்சிய பொலிஸ் நிலையத்தாக்குதலில் மரணித்த பேரவைத் தோழர்களுக்கு யாழ்ப்பாணபொது மக்கள் தோழர்கள் என்ற பெயரில் அஞ்சலிப்பிரசுரம் ஆயுதந்தாங்கிய கொலை, கொள்ளைகளை கட்டுப்படுத்துமாறு மாணவர் அவை இயக்கங்களுக்கு வேண்டுகோள்.

# முல்லைத்தீவிலிருந்து 39 அகதிகள் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவிலிருந்து தமிழ் அகதிகள் 39 பேர் பஸ் மூலம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தார்.

இவர்கள் நேற்று முன்தினம் மாலை ஐந்துமணியளவில் யாழ். கச்சேரிக்கு வந்தனர். செயலகம் பூட்டப்பட்டிருந்ததால் கச்சேரிக் கண்மையில் இயங்கும் யாழ். அகதிகள் முகாமுக்குச் சென்று அங்கு தங்கினர்.

திருகோணமலை நிலாவெளியைச்சேர்ந்த ஒன்பது குடும்பங்களைக் கொண்ட 39 பேர்களும் நிலாவெளியிலிருந்து கடல் மார்க்கமாக முல்லைத்தீவை அடைந்தார்களாம்: அங்கிருந்து முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் கடிதங்களுடன் இவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர். யாழ். அகதி முகாமில் இவர்களுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

யாழ். அகதிகள் முகாமில் நேற்றுக்காலை வரை 60 குடும்பங்களைச் சேர்ந்த 259 பேர் இருக்கிறார்கள். அகதிகள் தினமும் யாழ். அகதிமுகாமைவந்தடைவதால் தற்போது இயங்கி வருகிற யாழ். அகதி முகாமில் இடநெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்றும், இதனால் தற்காலிக வீடு கட்டப்பட இருப்பதாகவும் முகாம்பொறுப்பாளர் டாக்டர் ப. சுந்தரம் தெரிவிக்கிறார். (ஐ)

# பெரிய புல்லுமலையில் இரு சடலங்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு பெரியபுல்லுமலை எனும் இடத்தில் சிங்களப்பெண்ணான திருமதி அலிஸ் என்பவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதே இடத்தில் ஞானப்பிரகாசம் என்பவரின் சடலமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஞானப்பிரகாசத்தின் மனைவியை வீட்டில் காணவில்லையென்றும், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் பட்டுவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ய)


# அந்தியேட்டி அழைப்பு

அமரர்

## வி. தர்மலிங்கம் அவர்கள்

(மானிப்பாய்த் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



அன்புடையீர்,

1985-09-02 ஆம் நாள் இவ்வுலகைவிட்டு வைகுந்த வாழ்வெய்திய விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்களின் ஆன்ம சாந்தியை முன்னிட்டு 19-10-1985 ஆம் நாள் சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மறுநாளாகிய 20-10-1985 ஆம்நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும் ஆன்மசாந்திக்கிரியை, பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் குடும்பத்தினருடன் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(நண்பர், உறவினர் யாவரும் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்; தனித்தனியான அழைப்பு அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம்.)

இங்ஙனம்

திருமதி சரஸ்வதி தர்மலிங்கமும்
'காமதேனு' பிள்ளைகளும், குடும்பத்தினரும்.
கந்தரோடை, சுன்னாகம். 1262


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலக்கம் மேற்கு வீதி, 63 ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036 / 81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.


# மரண அறிவித்தல்

## J. S. குலத்துங்க (குலம்)

அக்குறஸ வாயியும் சாவகச்சேரி பெற்றோல் நிலையத்திலே நெடுங்காலம் கடமையாற்றியவரும், நண்பர்களால் குலம் என்றழைக்கப்பட்டவருமான J. S. குலத்துங்க தமது இல்லத்தில் மாரடைப்பால் காலமானார், ஈமச்சடங்குகள் 12 ந்தேதி சனிக்கிழமை நடைபெற்றன.

தகவல்; கே. குமாரவேலு, 29 காமஸ் அவெனியு, வெள்ளவத்தை.

PUWAKBODAWITA, AKKURASSA,
12-10-85. 1251